**<u>சார்பு நீதிமன்றம், அவிநாசி</u>**

**<u>OS – 135/2020</u>**

நாள் 14.10.2025

DW2 – சகுந்தலா

த/பெ – லேட். அருணாச்சலம்

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 14th day of October 2025)**

**<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1. இந்த வழக்கை யார் யாருக்கு எதிராக எதற்காக தாக்கல் செய்துள்ளார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது. நான் சொல்லும் உயில் சாசனம் எந்த தேதியில் எழுதப்பட்டது என்ற விபரம் எனக்கு தெரியுமா? என்றால் 1984–ம் ஆண்டில் உயில் எழுதப்பட்டதாக எனது அப்பா சொல்லி தெரியும், தேதி, மாதம் எனக்கு தெரியாது. அவ்வாறு உயில் சாசனத்தில் எனது அப்பா கையெழுத்து செய்ததை நான் நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். அதேபோல், அந்த உயில் ஏற்பட்ட விபரம் பற்றி எனக்கு எதுவும் நேரடியாக தெரியாது என்றால் சரிதான். அதேபோல், பழனிச்சாமி கவுண்டருக்கு எத்தனை ஆண்மக்கள், எத்தனை பெண் மக்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது. எனக்கு நீதிமன்றத்திலிருந்து சாட்சி சொல்ல சம்மன் எதுவும் வரவில்லை என்றால் சரிதான், 6–ம் பிரதிவாதி அழைத்ததின் பேரில் தான் நான் வந்தேன். அந்த உயில் சாசனம் எத்தனை தாள்களை கொண்டது என்ற விபரம் எனக்கு தெரியுமா? என்றால், அது எனக்கு தெரியாது. பி.வா.சா.ஆ.1 உயில் சாசனத்தில் 2–வது சாட்சியாக உள்ள எனது அப்பா கையொப்பங்களான பி.வா.சா.ஆ.5, பி.வா.சா.ஆ.6 கையொப்பங்களுக்கு இடையே வித்தியாசங்கள் உள்ளது என்றால் சரியல்ல.

2. 6–ம் பிரதிவாதி சுப்புராயன் என்பவரை எனக்கு சிறுவயது முதலே தெரியும். உயில் சாசனம் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டதா? என்றால் அது எனக்கு தெரியாது. எனது அப்பா உயில் சாசனத்தில் சாட்சி கையொப்பம் போட்டுள்ளதாக மட்டும் தான் என்னிடம் சொன்னார், மற்ற விபரங்கள் எதுவும் என்னிடம் சொல்லவில்லை. உயில் சாசனம் எழுதி வைத்ததாக சொல்லப்படும் பழனிச்சாமி கவுண்டர் 2007–ம் ஆண்டிலேயே இறந்து போய்விட்டார் என்றால் அது எனக்கு தெரியாது. அந்த பழனிச்சாமி கவுண்டரின் வாரிசுகள் யார் யார் இருக்கிறார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். அந்த பழனிச்சாமி கவுண்டர் எந்தவொரு உயிலும் எழுதி வைக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் சொல்வது போல பி.வா.சா.ஆ.1 உயில் சாசனத்தில் உள்ள அருணாச்சலம் என்ற கையெழுத்து என்னுடைய அப்பாவின் கையொப்பமே கிடையாது என்றும், 6–ம் பிரதிவாதி கேட்டுக்கொண்டதற்கிணங்க அந்த உயில் சாசனத்தில் உள்ள கையொப்பம் எனது அப்பாவின் கையொப்பம் என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அதனால் என்னுடைய சாட்சியம் ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை :–** **இல்லை**

**Take down by/before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused's pleader and admitted by the witness to be correct.**

C SENTHIL KUMAR

Digitally signed by C SENTHIL KUMAR
Date: 2025.10.14 13:00:29 -0100

**Subordinate Judge,**
**Avinashi.**